தான், ஏழைக் குடியிருப்பவர்களுக்கு நன்மை செய்யக் கூடியது, அவர்களுக்கு பாதகம் ஏற்படாது என்பதால் திருத்தம் தேவை யில்லை என்று தெரிவிக்கிறேன்.

The amendment was, by leave, withdrawn.

Clause 5 was put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move.

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 (L.A. Bill No. 11 of 1971) be passed.

MR. SPEAKER : The question is :—

"That the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1971 (L.A. Bill No. 11 of 1971) be passed.

The motion was put and carried and the Bill was passed into law.

(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஒரு அறிவிப்பு. 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன்வடிவை (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தன் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(4) அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1971).

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டைய மதுரை நகர மாநகராட்சி சட்ட முன்வடிவை @ பேரவை முன் வைப்பதில் பெருமையடைகிறேன். 1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

கடந்த இருபது ஆண்டுகளாக, மதுரையை மாநகராட்சியாக்க வேண்டுமென்கிற முறையீடுகள் அரசின் கவனத்தைக் கவர்ந்து வந்துள்ளன. பன்னெடுங்காலமாகவே தமிழ்ப் புலமைக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் உறைவிடமாக விளங்கிவந்த இந்நகர், வரலாற்றுச் சிறப்புடன் யாத்திரைத் தலமாகவும், சுற்றுலா

@ 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் தேதிய சிறப்பு தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.